# கதை கதையாம் காரணமாம்





தமிழ் ஐயா வெளியீட்டகம்
ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204
தஞ்சாவூர் மாவட்டம்.

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கதை கதையாம் காரணமாம் |
| வகை | : | கதைத் தமிழ் ஆய்வு |
| பதிப்பாசிரியர் | : | க. கண்ணகி<br>(பேசி : 94867 42503) |
| முதல்பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2046<br>(சூலை, 2015) |
| பதிப்புரிமை | : | தமிழ் ஐயா வெளியீட்டகம்,<br>திருவையாறு |
| நூல் அளவு | : | டெம்மி 1x8 |
| I.S.B.N. எண் | : | 978-81-930633-0-09 (V-IV) |
| எழுத்து அளவு | : | 11 |
| பக்கங்கள் | : | 528 |
| படிகள் | : | 500 |
| கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | ரூ. 500/- |
| கணினி அச்சு | : | செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி |
| அச்சாக்கம் | : | செல்வவிநாயகம் அச்சகம், சென்னை. |


கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகம் **11-07-2015** அன்று நடத்திய அனைத்துலக அளவிலான கதைத் தமிழ் 13- ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு.

## பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| | **அ. கதைத்தமிழ் மரபுகள்** | |
| 1. | கதைத் தமிழ் வளர்ச்சியும் வகைப்பாடுகளும் — முனைவர் மு. கலைவேந்தன் | 1 |
| 2. | கதை கதையாம் — முனைவர் சரசுவதி இராமநாதன் | 10 |
| 3. | குழந்தை வளர்ப்பில் கதைகள் — முனைவர் இரா. சாக்குலின் மேரி | 12 |
| 4. | கதை பிறந்த கதை — நா. உமாமகேசுவரி | 19 |
| 5. | தமிழிலக்கியக் கதைகளில் சமயப்பொறை — இரா. நிசா | 24 |
| 6. | குழந்தை இலக்கியக் கதைகளின் வழி குழந்தைகளின் உளவியல் — முனைவர் வெ. சுகந்தா | 31 |
| 7. | கதை வரலாற்றுத் தாக்கம் வருங்கால நோக்கம் — அ. ரோசிலின்மேரி | 37 |
| 8. | தன் வரலாறும் கதை இலக்கியமும் — முனைவர் கு. முத்துக்குமார் | 42 |
| 9. | தொல்காப்பியம் காட்டும் கதைக்கூறுகளும் மாந்தர்களும் — ந. பெரியசாமி | 46 |
| 10. | குறிஞ்சிப்பாட்டில் கதைக்கூறுகள் — முனைவர் இரா.சி.சுந்தரமயில் | 51 |
| 11. | சங்க இலக்கியங்களில் கதைக் கூறுகள் — முனைவர் ச.கௌ.கவிதா | 57 |
| 12. | சங்கப் பாடல்களில் தொன்மக் கதைகள் — ச. அரங்கராசன் | 61 |
| 13. | குறிஞ்சிப்பாட்டில் சிறுகதைக் கூறுகள் — முனைவர் க.பழனிவேல் | 64 |
| 14. | குறுந்தொகை காட்டும் கதை நிகழ்வும் கதைப் போக்குக் கூறுகளும் — முனைவர் அருவி. தேன்மொழி | 71 |

# 6. குழந்தை இலக்கியக் கதைகளின் வழி குழந்தைகளின் உளவியல்

**முனைவர் வெ. சுகந்தா**
*இணைப்பேராசிரியர் மற்றும் முதன்மையர்*
*தமிழ்த்துறை, சுயநிதிப்புலம்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்*

## முன்னுரை

இலக்கியத்தின் பல வடிவங்களில் கதை என்பது சிறப்பு வாய்ந்த ஒன்று. கதை எதையும் எளிதில் புரிய வைக்கும். அதை அறிந்துக் கொள்ள நுட்பமான அறிவு வேண்டும் என்ற நியதி இல்லை. பொய் சொல்லக்கூடாது உண்மையே சொல்ல வேண்டும் என்ற வாழ்வியல் நீதியைக் கட்டுரையாக்கித் தருவதைவிட கதையாகக் கூறும் போதும், முடிவுரை என ஒன்று இல்லாமல் கதையின் போக்கிலேயே கூறும் போதும் உண்மை பேசுதலே சிறந்தது என்று நீதி மனத்தில் தங்கிவிடுகிறது. கதைகள் சொல்லிக் கருத்துக்களைப் புலப்படுத்துதல், கதைகள் மூலம் உலகியல் பொருள்களைப் பற்றி முழுமையான தகவல்களைத் தருதல் என்னும் முறையில் குழந்தை இலக்கியத்தில், கதைகள் எங்ஙனம் வாழ்வில் அறத்தைக் கூறுகிறது என்பதை இக்கட்டுரை எடுத்துக் கூற விழைகிறது.

## அழ வள்ளியப்பா பற்றிய அறிஞர் கருத்துக்கள்

தமிழ் இலக்கிய உலகில் குறிப்பாக குழந்தை இலக்கியத்தில் தனி முத்திரை படைத்தவர் அழ.வள்ளியப்பா. இவர் குழந்தைக் கவிஞர், குழந்தை இலக்கிய முன்னோடி என எல்லோராலும் அறியப்படுகிறார். இவ்வுலக வாழ்க்கையின் அடிப்படைப் பண்பு அன்பாகும். குழந்தைப் பருவத்திலேயே இலக்கியங்களின் வாயிலாகக் குழந்தைகளிடம் அமைக்கப்பெற முடியுமென்னும் உறுதியோடு படைக்கப்பட்டவையே இவருடைய அனைத்துப் படைப்புகளும் என்று கூற முடியும்.

"அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று"